# அளவீடுகள்

V1283G





## நீளம்





### நினைவு கூர்வோம்

பொருள்களின் நீளத்தை நாம் கீழ்க்கண்ட திட்டமில்லா அலகுகளைக் கொண்டு அளந்து அறிகிறோம்.




விரல் கடை

ஒரு சாண்




ஒரு தப்படி



ஒரு காலடி



ஒரு முழம்



## 4.1 திட்ட அலகுகளின் தேவை


**செயல்பாடு 1**

உங்கள் நண்பர்களோடு சேர்ந்து உங்கள் வகுப்பறை மேசையை அளந்து கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையை நிரப்புக.

| வ. எண் | மாணவர்களின்பெயர் | விரல் கடை | சாண் | முழம் |
|---|---|---|---|---|
| 1 | நண்பன் 1 | 25 | 15 | 7 |
| 2 | நண்பன் 2 | | | |
| 3 | நண்பன் 3 | | | |
| 4 | நண்பன் 4 | | | |
| 5 | நண்பன் 5 | | | |

**செயல்பாடு 2**

ஒரு ரிப்பனின் நீளத்தை 'சாண்' மூலம் அளக்கவும்



நண்பன் 1 - ________ சாண்கள்

நண்பன் 2 - ________ சாண்கள்

நண்பன் 3 - ________ சாண்கள்

நண்பன் 4 - ________ சாண்கள்



திட்டமில்லா அலகுகளை பயன்படுத்தி அளவிடும் போது ஒருவருக்கு ஒருவர் அளவு வேறுபடும்.

**செயல்பாடு 3**

மாணவர்கள் இரு குழுக்களாகப் பிரிந்து ஒரு குழு திட்டமில்லா அலகுகளைக் கொண்டும் மற்றொரு குழு திட்ட அலகுகள் கொண்டும் வகுப்பறையின் நீளத்தை அளந்து பார்க்கவும்.

### நம்மைச் சுற்றியுள்ள பொருள்களின் நீளத்தை எளிய பொருள்களைக் கொண்டு அளந்து அறிதல்

**செயல்பாடு 4**

கொடுக்கப்பட்ட பொருள்களைக் கொண்டு, கரும்பலகையின் நீளத்தை ஐந்து மாணவர்களை கொண்ட குழுவால் அளக்க வேண்டும்

**பென்சில், அழிப்பான், அளவுகோல் மற்றும் நோட்டுபுத்தகம்.**

| வ. எண் | மாணவர்களின் பெயர் | பென்சிலின் நீளம் | அழிப்பானின் நீளம் | அளவுகோலின் நீளம் | நோட்டுப் புத்தகத்தின் நீளம் |
|---|---|---|---|---|---|
| 1 | கலா | 10 | 35 | 7 | 14 |
| 2 | | | | | |
| 3 | | | | | |
| 4 | | | | | |
| 5 | | | | | |



3rd_Unit_04_Measurement_Term 1.indd 45 2/20/2020 6:38:14 PM

மேசையை அளக்க மாணவர்கள் தங்கள் விரல் கடை, சாண் மற்றும் முழங்கை உபயோகப்படுத்தினர். ஆனால், அவர்களுக்கு வெவ்வேறு விடைகள் கிடைத்தது. ஏன்?



**நீட்டல் அளவை**


| தரப்படுத்தப்படாத அலகுகள் அளவீடு நபருக்கு நபர் மாறுபடும் | தரப்படுத்தப்பட்ட அலகுகள் அளவிடும் அலகுகள் மாறாதது |
|---|---|
| 1. விரல் கடை 2. சாண் 3. முழம் 4. தப்படி 5. காலடி | 1. மில்லிமிட்டர் 2. சென்டி மீட்டர் 3. மீட்டர் 4. கிலோமீட்டர் |

## 4.2 மில்லிமீட்டரும் சென்டிமீட்டரும்

### அறிமுகம்

இது ஒரு சென்டிமீட்டர் அளவுகோல். ஒரு சென்டிமீட்டரை குறிப்பது '1'. இரண்டு சென்டிமீட்டரை குறிப்பது '2'. '0' மற்றும் '1' க்கும் இடையே உள்ள நீளம், 10 பகுதிகளாக சிறு சிறு கோடுகள் மூலம் குறிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியின் அளவீடும் 'மில்லிமீட்டர்' எனப்படும்.




படத்திலிருந்து,

1 சென்டிமீட்டர் = 10 பாகங்கள்

10 பாகங்கள் = 10 மில்லிமீட்டர்

அதனால் 10 மில்லிமீட்டர் = 1 சென்டிமீட்டர்

**எழுதுவது எப்படி?**

| | |
|---|---|
| மில்லிமீட்டர் | - மி.மீ. |
| சென்டிமீட்டர் | - செ.மீ. |
| மீட்டர் | - மீ. |
| கிலோமீட்டர் | - கி.மீ |

'0' மற்றும் '1' க்கும் இடையில் எத்தனை மில்லிமீட்டர்கள் உள்ளன என்பதை நீங்கள் என்னிடம் சொல்ல முடியுமா?

இப்போது, 1 மற்றும் 2 – க்கும் இடையே எத்தனை மில்லிமீட்டர்கள் உள்ளன என்பதை என்னிடம் சொல்ல முடியுமா? 1 மற்றும் 3?

இப்போது 1 சென்டிமிட்டரில் எத்தனை மில்லிமீட்டர்கள் உள்ளன என்பதை என்னிடம் சொல்லவும்.

**ஆசிரியர் குறிப்பு:** ஆசிரியர், தரப்படுத்தப்படாத அலகுகளை பயன்படுத்தி பொருள்களின் நீளத்தை கண்டறிய குழந்தைகளுக்கு உதவ வேண்டும்.



3rd_Unit_04_Measurement_Term 1.indd 46 2/20/2020 6:38:14 PM

## தெரிந்து கொள்வோம்

100 சென்டிமீட்டர் = 1 மீட்டர்

1000 மீட்டர் = 1 கிலோ மீட்டர்

நீளத்தின் மிகச்சிறிய அலகு மில்லிமீட்டர் என்று அழைக்கப்படுகிறது.
நீளத்தின் மிகப்பெரிய அலகு கிலோமீட்டர் என்று அழைக்கப்படுகிறது.

**எடுத்துக்காட்டு:**



1 மி.மீ 2 மி.மீ 5 மி.மீ

மில்லிமீட்டர் (மி.மீ.)



சென்டிமீட்டர் (செ.மீ.)



மீட்டர் (மீ.)

## செயல்பாடு 4





அளவு நாடா மூலம் ரிப்பனின் நீளத்தை அளக்கவும்.

ராஜ் ____ சென்டிமீட்டர்  அனு ____ சென்டிமீட்டர்

ராம் ____ சென்டிமீட்டர்  கவி ____ சென்டிமீட்டர்

திட்ட அளவைகள் கொண்டு திட்ட அலகுகளால் அளக்கும்போது ரிப்பன்களின் நீளம் மறுபடுவதில்லை.

## பயிற்சி செய்

சென்டிமீட்டர் அளவுகோல் மூலம், பின்வரும் பொருள்களின் நீளங்களை அளவிட்டு, கீழே உள்ள கோடிட்ட இடங்களில் நிரப்புக.

7WN2SC











____ செ.மீ  ____ செ.மீ  ____ செ.மீ  ____ செ.மீ  ____ செ.மீ

**ஆசிரியர் குறிப்பு:** ஆசிரியர், குழந்தைகளுக்கு பொருள்களை சரியாக அளவிடவழிகாட்ட வேண்டும்.



3rd_Unit_04_Measurement_Term 1.indd 47 2/20/2020 6:38:15 PM

## 4.3 அளவுகோலைக் கொண்டு பொருள்களின் நீளத்தை அளத்தல்

| பொருள்கள் |  |  |  |  |
|---|---|---|---|---|
| நீளம் (செ.மீ) | 30 செ.மீ | ☐ செ.மீ | ☐ செ.மீ | ☐ செ.மீ |

## 4.4 சென்டிமீட்டரும் மீட்டரும்

### இவற்றை முயல்க

அ. கோடிட்ட இடத்தில் மீட்டர் அல்லது சென்டிமீட்டர் என்று எழுதவும்

i. எனது பென்சில் 6 ______ நீளம். ii. என் கொண்டை ஊசியின் நீளம்______ நீளம்.


iv. இந்த மரம் 3 ______ உயரம். iv. தென்னை மரத்தின் உயரம் 15______ .

ஆ. மீனாவிடம் 50 சென்டிமீட்டர் ரிப்பன் மற்றும் ரீனாவிடம் 110 சென்டிமீட்டர் ரிப்பனும் உள்ளது

யாருடைய ரிப்பன் மிகவும் பெரியது? ☐

### செயல்பாடு 6

உன் வகுப்பறையில் உள்ள பின்வரும் பொருள்களின் நீளத்தை, மீட்டர் அளவு நாடா உதவியுடன் அளந்து அட்டவணையில் எழுதவும்.


☐ மீட்டர்


☐ மீட்டர்


☐ மீட்டர்


☐ மீட்டர்

## சென்டிமீட்டர்,மீட்டர் மற்றும் கிலோ மீட்டரில் எவை சிறியது, பெரியது என்று புரிந்து கொள்ளுதல்

### இவற்றை முயல்க

கீழே உள்ள பெட்டிகளில் சரியான குறியீட்டை '< மற்றும் >' குறியிடவும்.

அ. சென்டிமீட்டர் ☐ மீட்டர்

ஆ. மீட்டர் ☐ கிலோ மீட்டர்

இ. கிலோ மீட்டர் ☐ சென்டி மீட்டர்



3rd_Unit_04_Measurement_Term 1.indd 48 2/20/2020 6:38:15 PM




## பயிற்சி செய் பொருத்துக.

| | | |
|---|---|---|
|  |  |  |
| கிலோ மீட்டர் | சென்டி மீட்டர் | மீட்டர் |

## 4.5 தோராய அளவைத் திட்ட அளவுடன் ஒப்பிடுதல்

### செயல்பாடு 7

கொடுக்கப்பட்டுள்ள பொருள்களின் நீளத்தைப் தோராயமாக அளந்து பின்பு தரப்படுத்தப்பட்ட அளவு கொண்டு அளந்து சரி பார்.

| வ.எண் | பொருள்களின் பெயர் | தோராய அளவு | துல்லியமான அளவு |
|---|---|---|---|
| 1 |  | | |
| 2 |  | | |
| 4 |  | | |
| 6 |  | | |
| 7. |  | | |
| 8. |  | | |



## பயிற்சி செய்

**1.** பின்வரும் விடைகளில் வேறுபட்டதை வட்டமிடுக.

1. மி.மீ  2. செ.மீ.  3. மீ  4. முழம்

**2.** நிரப்புக.

1 மீட்டர் = <u>100</u> செ.மீ.  2 மீட்டர் = ______ செ.மீ.

3 செ.மீ. = ______ செ.மீ.  4 மீட்டர் = ______ செ.மீ.

**3.** பொருத்துக.

| | |
|---|---|
| 10 மில்லி மீட்டர் | 1 கிலோ மீட்டர் |
| 100 சென்டி மீட்டர் | 1 சென்டி மீட்டர் |
| 1000 மீட்டர் | 1 மீட்டர் |

**4.** தரப்படுத்தப்படாத அலகுகளை எழுதவும்

1. விரல் கடை  2. ________________
3. ________________  4. ________________
5. ________________

**5.** உங்களுக்கு தெரிந்த திட்ட அலகுகளை எழுதுக.

1. மில்லி மீட்டர்  2. ________________
3. ________________  4. ________________

**6.** சுருங்கிய வடிவில் எழுதவும்.

மில்லி மீட்டர் : ________  சென்டி மீட்டர் : ________

மீட்டர் : ________  கிலோ மீட்டர் : ________

JT9WH8

**7.** கொடுக்கப்பட்ட அலகுகளை வரிசைப்படுத்தி எழுதவும்.

மிமீ  மீட்டர்  செ.மீ  கிமீ

ஏறு வரிசை ________, ________, ________, ________

இறங்கு வரிசை ________, ________, ________, ________



3rd_Unit_04_Measurement_Term 1.indd 50  2/20/2020 6:38:16 PM